

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு , முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளை முன்னிட்டு , தில்லை நகரில் உள்ள அலுவலகத்தில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் மு அன்பழகன், எம்எல்ஏ ஸ்டாலின் குமார், மத்திய மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்லும், விஜயா ஜெயராஜ், கருணாநிதி பொருளாளர் துரைராஜ், மாத்தூர் கருப்பையா , டோல்கேட் சுப்பிரமணி, தர்மன் ராஜேந்திரன் கதிர்வேல் ,கே என் சேகரன் , தொமுச மாவட்ட செயலாளர் குணசேகர், மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, உத்தமர்சிவி ராஜேந்திரன், கலைமற்றும் கழக நிர்வாகிகள் விஜயலட்சுமி கண்ணன் ,மோகன் தாஸ், போட்டோ கமல், வாமடம் சுரேஷ்முத்து பழனி ,எம் ஆர் எஸ் குமார் ,கார்த்திக் ,தாஹிர் உட்படப்பலர் கலந்து கொண்டனர்



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பட்டமரத்தான் கோவில் அருகில் காயாம்புஞ்சை இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேசம்பட்டி, சேக்கிபட்டி, குன்னாரம்பட்டி, வளச்சேரிபட்டி, சொக்கம்பட்டி, தொந்திலிங்கபுரம் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சிதம்பரவிடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், கூட்டுறவு சரக துணைப்பதிவாளர் (அறந்தாங்கி) திருமதி.மணிமேகலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

